**செய்தி வெளியீடு எண்: 750** **நாள்: 17.10.2018**

**<u>பத்திரிக்கை செய்தி</u>**

**சுவஸ்த் பாரத் யாத்ரா'' மிதிவண்டி தொடர் பேரணி**
**(16 அக்டோபர் முதல் 27 ஜனவரி 2019)**

மகாத்மா காந்திஜியின் 150வது பிறந்தநாளை நினைவுகூறும் வகையில் **சுவஸ்த் பாரத் யாத்ரா''** என்ற இயக்கத்தின் மூலம் இந்திய உணவு பாதுகாப்பு தர நிர்ணய ஆணையம், அக்டோபர் 2018 முதல் ஜனவரி 2019 வரை மிதிவண்டி தொடர் பேரணி பிரச்சாரம் மூலம் ஆரோக்கியமான உணவு, பாதுகாப்பான உணவு சாப்பிடு மற்றும் செறிவூட்டப்பட்ட உணவு என்ற செய்தியை மக்களை சென்றடைய திட்டமிட்டுள்ளது.

இந்த யாத்திரை 1930ல் காந்திஜியால் நடத்தப்பட்ட உப்பு சத்தியாகிரக போரட்டமான தண்டியாத்திரையை நினைவு கூறுகிறது. உப்பு சத்தியாகிரக போரட்டம் இந்தியாவில் எதிர்காலத்தை மாற்றியது. இந்தியா வருங்காலத்தில் ஆரோக்கிய தேசமாக மாற்றுவதற்காக அயோடின், இரும்பு சத்து செறிவூட்டப்பட்ட உப்பை அடிப்படையாக கொண்ட சரியான உணவை தேர்ந்தெடுப்பதன் மூலம் "பாதுகாப்பான உணவை சாப்பிட்டு நலமோடு வாழ்" என்ற வாசகங்களை கொண்டு தனது பயணத்தை துவக்குகிறது.

1. ஆரோக்கியமான உணவை சாப்பிடு (தொற்றுநோய்களை தடுக்கலாம்)
2. பாதுகாப்பான உணவை சாப்பிடு (உணவு சார்ந்த நோய்களை தடுக்கலாம்)
3. செறிவூட்டப்பட்ட உணவு (நுண்ணிய சத்துக்கள் குறைப்பாட்டை தவிர்க்கலாம்)

உலக உணவு நாளான 16.10.2018 அன்று நாட்டில் ஆறு பல்வேறு இடங்களில் மிதிவண்டி தொடர் பேரணி கொடியசைத்து தொடங்கி 27.09.18 அன்று புதுடெல்லியில் நிறைவடைய உள்ளது. இப்பேரணி இந்தியாவில் பல்வேறு கிராமங்கள், நகரங்கள் மற்றும் மாநகரங்களையும் கடந்து, சரியான உணவை தேர்ந்தெடுக்கும் அவசியத்தையும், ஆராக்கியமாக வாழ்வதையும், அவ்வாறு சாப்பிடுவதால் உடல் நலமோடு இருப்பதையும் பிரச்சாரம், கேளிக்கைகள் மூலம் இந்திய குடிமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் பிரச்சாரத்தை மேற்கொள்ள உள்ளது. சுவஸ்த் மேலா மருத்துவ முகாம்கள் மற்றும் நடமாடும் பகுப்பாய்வு கூடங்கள் மூலம் உணவு பரிசோதனைகளை மேற்கொண்டும், Eat Right India முக்கியத்துவத்தை தெரிவிக்கும்.

மொத்தமுள்ள ஆறு தடங்களில் தடம் III மற்றும் IV தமிழ்நாடு வழியாக கடந்து செல்ல உள்ளது.

**தடம் III** - கேரளா மாநிலம் திருவனந்தபுரத்தில் 16.10.2018 அன்று கொடியசைத்து தொடங்கி கன்னியாகுமாரி மாவட்டத்தில் தக்களை 17.10.2018 அன்று அடையவுள்ளது அதன்பின் அப்பேரணி திருநெல்வேலி, கோவில்பட்டி, சிவகாசி, மதுரை, திண்டுக்கல், கரூர், ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்கள் வழியாக பெங்களூரை 10.11.2018 அன்று சென்றடையும்.

தடம் IV புதுச்சேரி மாநிலத்தில் 16.10.2018 அன்று தொடங்கி மாமல்லபுரம், சென்னை, திருவள்ளூர், திருத்தணி வழியாக திருப்பதியை 25.10.2018 அன்று சென்றடையும். மாவட்டத்தில் 25 மிதிவண்டியாளர்கள் மாவட்டத்தின் யாத்திரை தொடங்கும் இடத்திலிருந்து நிறைவடையும் இடத்திற்கும் இடையே உள்ள தூரமான 60 முதல் 80 கிலோமீட்டரை கடந்து செல்வார்கள்.

**தமிழ்நாடு உணவு பாதுகாப்புத்துறை இந்த மிதிவண்டி தொடர் யாத்திரையை வெற்றிகரமாக பல விரிவான நிகழ்ச்சிகள் மூலம் ஆரோக்கியமான உணவு, பாதுகாப்பான உணவு, மற்றும் செறிவூட்டப்பட்ட உணவு என்ற செய்தியை மக்களுக்கு விழிப்புணர்வு மூலம் சென்றடைய ஏற்பாடு செய்துள்ளது.**

**நிகழ்ச்சி நாள் 1**

அந்தந்த மாவட்டங்களில் மிதிவண்டியாளர்களை முதல் நாளில் வரவேற்பு நாளாகவும், மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளின் மூலம் பொதுமக்கள் அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாவட்டங்களில் கீழ்க்கண்ட பல்வேறும் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

- காலை நடைபயிற்சி மூலம் விழிப்புணர்வு
- பிரபலமான சமையலர், ஊட்டச்சத்து நிபுணர் மற்றும் பிரமுகர்களின் சொற்பொழிவு
- கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களால் பராம்பரிய கலைநிகழ்ச்சி
- வண்ணம் தீட்டுதல், ஓவியம் வரைதல், சமைத்தல் போன்ற போட்டிகள்
- சரியானவற்றை சாப்பிட பொதுமக்களும் மாணவர்களும் உறுதி ஏற்பு செய்தல்
- முதியவர்களுக்கும் குழந்தைகளுக்கும் இரும்பு புரதம் சதவீதம் கண்டறிதல்
- உள்ளூர் தொலைக்காட்சி, பதாகைகள் மூலம் பாதுகாப்பான உணவை பற்றி நலக்கல்வி
- பராம்பரிய கலைநிகழ்ச்சிகள் தப்பாட்டம், மயிலாட்டம், கரகாட்டம்
- சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் மூலம் மற்றும் உள்ளூர் கேபிள் தொலைக்காட்சி மூலம் விழிப்புணர்வு நடவடிக்கைகள்
- பாதுகாப்பான மற்றும் தரமான உணவு கண்காட்சி
- நடமாடும் உணவு ஆய்வுக்கூடம் மூலம் உணவுப்பொருள் ஆய்வு குறித்து விழிப்புணர்வு

இரண்டாம் நாளான சைக்கிள்நாள் அன்று அந்தந்த மாவட்டத்தை கடக்கும்போது அவர்களுக்கு நிறுத்தங்கள் ஏற்படுத்தப்பட்டு அவரவருக்கு Refreshment மற்றும் புத்துணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.

தேசிய நெடுஞ்சாலை அல்லது தேசிய நெடுஞ்சாலை அருகிலுள்ள பள்ளிகளில் சத்தான பாதுகாப்பான உணவைப்பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பாதுகாப்பான உணவு மையங்களை ஏற்படுத்துதல் போன்ற நிகழ்வுகளும் நடைபெற உள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் யாத்திரையில் பங்குபெறுவோர்களை வரவேற்றல் மற்றும் கொடியசைத்து துவக்குதல் போன்ற நிகழ்வுகள், அந்தந்த உள்ளூர் அமைச்சர், நாடளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள், முக்கிய அலுவலர்கள் மூலம் தொடங்கப்படும்.

**சென்னை தடம் IV**

19.10.2018 அன்று மாலை 4.00 மணியளவில் காஞ்சிபுரம் மாவட்டத்திலிருந்து வரும் மிதிவண்டி பேரணியை வரவேற்கும் நிகழ்வு கிண்டி, காந்தி மண்டபத்தில் நடைபெற உள்ளது. மாண்புமிகு சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் மிதிவண்டியாளர்களை வரவேற்க உள்ளார். அரசு முதன்மை செயலர் சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை, ஆணையர் உணவு பாதுகாப்புத்துறை, ஆணையர் காவல்துறை மற்றும் உயர் அலுவலர்கள் இந்நிகழ்வில் பங்கேற்க உள்ளனர்.

20.10.2018 அன்று ஸ்டெல்லா மெரிஸ் மகளிர் கல்லூரியில் கலைநிகழ்ச்சிகள் ஆரோக்கியமான உணவு இயக்கம், பாதுகாப்பான உணவு குறித்து போன்ற பல கலைநிகழ்ச்சிகள், உணவு பாதுகாப்புத்துறையால் 16வது உலக உணவு நாளன்று நடத்தப்பட்ட கலைநிகழ்ச்சிகளில் பங்குபெற்றோர்களுக்கு பிரபலமானவர்களால் பரிசுகள் வழங்கப்படவுள்ளது.

21.10.2018 அன்று எலியாட்ஸ் கடற்கரை பெசன்ட் நகரில் மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் ஆணையர் உணவு பாதுகாப்புத்துறை, ஆணையர் காவல்துறை மற்றும் உயர் அலுவலர்களால் மிதிவண்டி தொடர்பேரணி கொடி அசைத்து தொடங்கப்படவுள்ளது.

உணவு பாதுகாப்பு தரநிர்ணய ஆணையம் இந்த மீதிவண்டி பேரணி மூலம் உணவில் குறைந்த உப்பு, குறைந்த சர்க்கரை, மற்றும் குறைந்த கொழுப்பு சேர்ப்பதன் மூலம் மக்களிடையே ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்க ஊக்குவித்துள்ளது.

தமிழ்நாடு உணவு பாதுகாப்புத்துறை இந்திய தரநிர்ணய ஆணையம், பங்குதாரர்கள், உணவு வணிகர்கள் மற்றும் பல்வேறு துறையினருடன் கைகோர்த் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொண்டுள்ளது. ஆணையர், உணவு பாதுகாப்புத்துறை அவர்கள் அனைத்து இளைஞர்கள், குழந்தைகள், பெரியவர்கள் மற்றும் பெண்கள் ஆகியோரை இந்த நிகழ்வில் பங்கேற்று ஆரோக்கியமான வாழ்விற்கு பாதுகாப்பான உணவை உட்கொள்ள விழிப்புணர்வை பெறுமாறு கேட்டுக்கொள்கிறார்.

## அறிவிப்புகள்

- உணவு பாதுகாப்பு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட, புகார் மற்றும் குறைகளின் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க உணவு பாதுகாப்புத்துறைக்கென தனி வலைதளம் (Website) மற்றும் கைபேசி செயலி (Android App) 20 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.
- தமிழ்நாட்டில் உள்ள 100 சுற்றுலா தலங்களில் உணவுப் பாதுகாப்பு தகவல் தொடர்பு மையங்கள் (Food Safety Hubs) 15 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.
- உணவில் உள்ள கலப்படம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்திட மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு கலப்படங்களை கண்டறியும் செயல்முறை விளக்கங்கள் குறித்து 16 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும்.
- தமிழகத்தில் மேலும் 10 மாநகராட்சிகளில் உள்ள அரசு பள்ளிகளில் பாதுகாப்பான ஊட்டச்சத்து உணவு குறித்த விழிப்புணர்வு மற்றும் பயிற்சி SNF@School (Safe Nutrition Food Awareness and Training at School) 10 இலட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**